
Chidananda Shashtiabda Poorthy Commemmoration Volume.

# SRI CHIDANANDA VILASAM

*A LIFE SKETCH OF:*

THE KUPPUSWAMI SASTRI
RESEARCH INSTITUTE
MADRAS.



SRI CHIDANANDA

BRAHMASRI N. SUBRAHMANIA IYER AVL.

BY

SRI E. R. KRISHNASWAMY IYER

*PUBLISHED BY:*

SRI N T. SUBRAMANIA IYER,

GOLDEN ROCK, TRICHY.

1942.

## Members of the Commemmoration Committee

1. Rao Bahadur Dr. M. Subramania Iyer, B.A. M.B. C.M.
2. Sri T B.L.
3. Sri A
4. Sri I
5. Sri

K.S.R.I. LIBRARY
ACCESSION NUMBER
3894

*Secretary & Treasurer*

*The Hony. Manager :—*

**SRI GUHANANDA MANDALY,**
**CATHEDRAL, MADRAS.**

# ஸ்ரீசிதாநந்த விலாஸம்

## விஷய ஸூசிகை


பக்கம்.

1. ஜென்மபூமியும், வம்சாவளியும். ... 3
2. தந்தையாரின் பெருமையும், அவருக்கு ஷண்முகன் பிரத்தியக்ஷமாய் நோய் தீர்த்தலும், உபதேசித்து ஆட்கொள்ளலும். ... 4
3. ஜனனம். ... 14
4. வித்யாப்பியாஸம். ... 15
5. தந்தையார் மூலமாய் ஷடக்ஷர உபதேசம் பெறுதல். தந்தை விதேஹ கைவல்யமடைதல். ... 16
6. உத்தியோகம். ... 17
7. இடையில் பிரயாகையில் ஸத்குரு தர்சனம். ... 18
8. அவர்பால் மஹாவாக்கியம், ஹம்ஸம், ஸ்ரீவித்யா தீக்ஷைகளைப் பெறுதல். ... 22
9. குருகுலவாஸம், ஸ்ரீஸுப்ரஹ்மண்ய தத்துவோபதேசக்கிரஹணம், வேதாந்த சிரவணம் ... 24
10. ஸத்குருவைப் பிரிதல் - கயா - காசீ முதலிய க்ஷேத்ராடனம். ... 26
11. குருவாக்ஞையின்படி பன்னிரண்டு வருஷம் பிறர் அறியாமல் சித்சக்தியை யுபாஸித்தல் - வேதாந்த விசாரணை முதலியன செய்தல்- சாந்தாத்திரி யென்னும் திருத்தணிகைக்குப் பிரதிவருஷம் தைமாதக் கிருத்திகை யன்று சென்று ஸத்குரு ஸ்வரூபத்தைத் தரிசித்தல். ... 27
12. காஞ்சீகாமகோடிபீடத்தில் பௌர்ணமிதோறும் நவாவரண பூஜை நடக்கும்படி ஏற்பாடு செய்தல் ... 28
13. ஞானஸந்ததியின் அபிவிர்த்திக்காகத் தக்கவர்களுக்கு ஸ்ரீவித்யா தீக்ஷை செய்து உபதேசித்தல். ... 29
14. ஸ்ரீபிரஹ்மவித்யா விமர்சினீ ஸபையைஸ்தாபித்தல். ... 30
15. உபாஸகர்களுக்கு அத்தியாவசியமான சில அபூர்வ கிரந்தங்களை இயற்றியும், மொழி பெயர்த்தும், தொகுத்தும் வெளியிடல். ... 30
16. ஸ்ரீகுஹாநந்தமண்டலியின் நிர்மாணம். ... 31

# இந்நூலில் விட்டுப் போன முக்கிய விஷயங்கள்

## 1. ஸ்ரீசேஷாத்திரி ஸ்வாமிகளின் தரிசனம்

ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகளைப்பற்றிப் பலர் பலவாறு கூறினார்கள். ஸ்ரீவித்தையை உபாஸித்துப் பைத்தியம் பிடித்ததென்றே பொதுஜன வதந்தி. இந்த வதந்தி சரிதானோ வென்று பரீக்ஷிக்க என் குருநாதர் அங்கு போனார். 1920-ஆம் மேமீ-ல் ஒரு நாள் இரவு 9-மணிக்குக் கம்பத்திளையனார் கோயிலில் ஸ்வாமிகளைக் கண்டு வந்தனம் செய்தார். அப்பொழுது ஸ்வாமிகள் சிரித்து "விடியற்காலம் மூன்று மணிக்கு வா" என்று கட்டளையிட்டனர். உடனே எனது குருநாதன் பரம ஸந்தோஷத்தோடு அன்றிரவு முழுதும் தூங்காமல் ஜாக்கிரதையோடிருந்து விடியற்காலம் மூன்று மணிக்கு ஸ்வாமிகளைத் தரிசித்தபோது ஸ்வாமிகளின் சரீரம் முழுமையும் ஒரே சிகப்பாய் இருந்தது. ஸாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்தனர். அப்பொழுது ஸ்வாமிகள், "நன்றாய்ப் பார் - தெரிந்ததா? ஸந்தேகமில்லையே? உனக்கு கிடைத்ததைப் பத்திரமாய்க் காப்பாற்று - போ - இப்பொழுதே போ." என்று கூறிவிட்டுப் போய் விட்டார். உடனே எனது குருநாதன் ஸ்வாமிகளையொரு மஹானென்றுணர்ந்து அவரது அநுக்கிரஹத்திற்குப் பாத்திரனானேமே என்று களிகூர்ந்து சென்னைக்குத் திரும்பினார்.

## 2. காஞ்சீகாமகோடிபீடம் ஸ்ரீசங்கராசாரியரின் ஆக்ஞை

மதுரை பிரஹ்மஸ்ரீ M. S. மந்த்ரேச்வரசர்மாவும் என் குருநாதரும் காஞ்சீகாமகோடிபீடம் சங்கராசாரியரைத் தரிசிக்க விழுப்புரம் சென்றனர். ஆசார்யாளைத்தர்சித்து ஸ்ரீமந்த்ரேச்வரசர்மா தான் இயற்றிய சில ஸ்தோத்திர ஸ்லோகங்களை ஸ்வாமிகளுக்கு வாசித்து நிவேதித்தனர். அப்பொழுது ஆசார்யாள் எனது குருநாதரை நோக்கி "நீயும் காமாக்ஷியின் மேல் ச்லோகங்கள் செய்" என்று உத்தரவிட்டனர். ஆசார்யாளின் ஆக்ஞையின்படியே எனது குருநாதர் ஸ்ரீகாமாக்ஷீ மாத்ருகா ஸ்தோத்திரமும், ஸ்ரீகுருவார்யாஸ்தவமும், ஸ்ரீமஹாஷோடசீ மந்த்ரமாத்ருகா ஸ்தோத்திரமும் இயற்றி அச்சிட்டு ஆசார்யாள் சென்னைக்கு விஜயம் செய்தபோது ஸந்நிதானத்தில் ஸமர்ப்பித்தனர். ஆசார்யாள் தெலுங்கு தேசத்திற்கு விஜயம் செய்தபோது அச் சிறு நூலைத் தக்கவர்களுக்கு வழங்கி வந்ததாகத் தெரிகின்றது.

॥ श्रीगुहमयम् ॥

# ॥ श्रीचिदानन्द विलासः ॥

## मंगळाचरणम्

श्रीमाताऽमलहृत्सरोजमहिता कामारिवामाऽसमा
मादामोदरपूजितांघ्रिसुषमा सोमादिवन्द्याऽदिमा ।
सामादिश्रुतिवाक्यमृग्यमहिमा रामानुजा सा मम
क्षेमायास्तु चिरं सुपुण्यमहिमा भूमाभिनन्द्यागमा ॥

# ஸ்ரீ சிதானந்த விலாஸம்

## பாயிரம்

(மங்கலம்)

(இதன் பொருள்) ஸர்வவுலகங்களுக்கும் தாயாகவும், குருமூர்த்தமாய்த் தோன்றி யென்னையிச் சமுஸாரஸாகரத்தினின்றுங் கரை சேர்த்தவளாயும், பரிசுத்தமான புத்தியோடு உபாஸிக்கின்றவர்களுக்குச் சகல ஸௌபாக்கியங்களையும் மோக்ஷத்தையுங்கொடுக்கக்கூடியவளாயும், ஆசையென்னும் காமனை யெரித்துச்சுட்ட பரமேஶ்வரனது வாமபாகத்திலிலங்குபவளாயும், தனக்கு நிகரில்லாத பிரபாவமுடைவளாயும், லக்ஷ்மீநாராயணர்களால் பூஜிக்கப்பட்ட சரணங்களையுடையவளாயும், சந்திரன், மன்மதன் முதலிய பன்னிருவரால் உபாஸிக்கப்பட்ட வித்யைகளுக்கு லக்ஷ்யார்த்தமாய் விளங்குபவளாயும், ஸாமம், ருக், யஜுஸ் என்னும் வேதவாக்கியங்களால் தேடியுங்காணப்படாத மஹிமையோடு கூடியவளாயும், யாவற்றிற்கும் ஆத்யையாயும், தனக்கொப்பில்லாத அழகோடு கூடியவளாயும், காமகலாஸ்வரூபிணியாயும், அநேகவிதமான ஆகமங்கள் தந்த்ரங்கள் அர்ணவங்கள், யாமளங்கள், ரஹஸ்யங்கள் முதலியவற்றால் பிரதிபாதிக்கப்பட்ட பூமாஸ்வரூபமுடையவளாயும

உள்ள ஸ்ரீமாதாவானவள் அடியேனுக்குப் பாமஸ்ரேயஸ் ஸாகும் மோக்ஷத்தைத் தரும்பொருட்டு நன்கு விளங்கட்டும்.

பாயிரம் முற்றிற்று.

## நூல்

பூவுலகில் புண்ணிய பூமியென்று போற்றிப் புகழ விளங்குவது பரதகண்டம். இது வடக்கே ஹிமாசலம் முதல் தெற்கே கன்னியாகுமாரி வரையிலும், கிழக்கே காமரூபம் முதல் மேற்கே காந்தாரம் வரையிலும் வியாபித்துள்ளது.

இதன் தென்பாரிசத்தில் விந்தியமலைக்குத் தெற்கேயுள்ளது தக்ஷிண தேசமெனப்படும். இதுவும் பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் தொண்டை நாடும் ஒன்று. "தெண்ணீர் வயற்றொண்டை நன்னாடு சான்றோருடைத்து;" என்னும் புகழ்ச்சிக் குரியது தொண்டை நாடாகும் : அன்றியும் இது,

"பிறக்கு நானிலத்து யிர்க்கெலாம் பொருள் தாயாய்ச்
சிறக்கு மெம்பெரு மாட்டியுந் திருக்கயி லையைவிட்
டறிந்தின் மேம்படு மெட்டுநா லறஞ்செயற் கிடமாய்த்
துறக்க நாட்டினுஞ் சிறந்தது தொண்டை நன்னாடு."

என்று அறிஞரால் புகழ்ந்து போற்றற்குரிய நாடாகவும் விளங்குகின்றது.

## ஜன்ம பூமி

இத்தொண்டை நாட்டிற்கு ஒரு முகம்போல் விளங்குவது காஞ்சீபுரம். இது, முக்தி தாயகமாயிலகும் ஸப்த புரிகளில் ஒன்றென்பது மிகப்பிரஸித்தமாம். இக் காஞ்சிமாநகரத்திற்குத் தெற்கே இருபத்தி நான்கு மைல் தூரத்தில் தவளகிரி (வெண்குன்றம்) என்று கூறப்படும் சிறிய மலையொன்றிருக்கின்றது. இதையுடையவூருக்கு வந்தவாசி யென்று பெயர். இதற்கு மேற்கே சுமார் பத்து மைல் தூரத்தில் செப்பிட்டாங்குளம் (ताम्रस्थापितवापी)

என்னும் பெயரோடுகூடிய ஒரு சிறு கிராமமுண்டு. அந்த கிராமத்தின் அக்ரஹாரத்தில் "நடிமிண்டி" யென்னுங் குடிப்பெயரோடு விளங்கும் ஒரு கிருஹம் இருக்கின்றது. அக்கிரஹஸ்தர்கள் வடக்கே ஸப்தகோதாவரீ தீரத்திலிருந்து வந்து குடியேறியவர்கள்; பரமவைதிகர்கள்; அக்னிஹோத்திரிகள்; கௌண்டின்ய கோத்திரத்தைச் சார்ந்தவர்கள்; ஆபஸ்தம்பஸூத்திரிகள்; யஜுஶ்ஶாகாத்தியாயிகள்.

## வம்சாவளி

அவர்களில், ஸ்ரீஸுப்ரஹ்மண்ய யஜ்வாவுக்கும், தனது பர்த்தாவுடன் ஸஹகமனம் செய்த ஸ்ரீநாராயணியம்மாளுக்கும் பிரபௌத்திரரும், ஸூர்ய நாராயணய்யாவுக்கும் நாரணம்மாளுக்கும் பௌத்திரரும், வெங்கட்ராயலய்யாவுக்கும், கனகம்மாவுக்கும் புத்திரருமான நரஸய்யா வென்னும் பெயருள்ள அந்தண சிரேஷ்டர் ஒருவர் இருந்தார். அவர் ஆந்த்ரர்; வேகி நாடு வம்சத்தைச் சார்ந்தவர். இவர் கி. பி. 1838–39 விளம்பி வருஷத்திற் பிறந்தவர். ஸம்ஸ்கிருதம் ஆந்த்ரம் இரண்டு பாஷைகளையுங் கற்றதோடு, பூர்வாபரக்கிரியைகளைச் சாஸ்த்ரீயமாய்ச் செய்து வைக்கும் திறமையோடு கூடியவர். அவர் எப்பொழுதும் தமது பரம்பரைக் குலதெய்வமாகிய ஸ்ரீதணிகாசலக் குஹனைத் திரிகரணத் தூய்மையோடு உபாஸித்துக் கொண்டு விளங்கியவர்.

அவர் மேற்படி காஞ்சீபுரத்திற்குத் தெற்கே சுமார் பத்து மைல் தூரத்திலுள்ள புதுப்பாளையமென வழங்கும் பொதியர் பாளையத்திற் சேர்ந்த கிருஷ்ணராயபுரமென்னும் மதகமேட்டின் அக்ரஹாரத்தில் ஸ்ரீவேங்கடேஶ்வரய்யாவுக்கும், வெங்கடஸுப்பம்மாளுக்கும் பிரபௌத்திரியும், வெங்கடநாராயணய்யாவுக்கும், வெங்கம்மாளுக்கும் பௌத்திரியும், குப்பய்யாவுக்கும், அச்சம்மாளென்னும் லக்ஷ்மியம்மாளுக்கும் புத்திரியுமான ஸௌபாக்யவதி அம்மாயி அம்மாளைப் பாணிக்கிரஹணஞ் செய்து கொண்டனர்

# பிதாவின் மகிமை

விவாஹமான சில நாட்களுக்கெல்லாம் நரசய்யருக்குப் பூர்வ ஜென்மங்களிற் செய்த பாபகர்மங்களின் பயன் வடிவமாய் ஒரு சூலநோய் உண்டாயிற்று. அந்நோய் நரசய்யரது சரீரத்தை மிகவும் வாட்டி வருத்தியது. அவ் வியாதியின் கொடுமையைப் பொறுக்க முடியாமல் நம் நரசய்யர், அக்ஷய ஹு ஆனி மாதத்தில் ஒரு நாள், தன தூராகும் செப்பிட்ட ஈங்குளத்திலிருந்து ஆறு நாழிகை தூரத்தில் உள்ள நெடுங்குன்றம் (दीर्घाचल) என்னும் பெயருள்ள ஒரு குன்றின் உச்சியையடைந்து அங்கிருந்து விழுந்து தன் பிராணனை மாய்த்துக் கொள்ளத் தீர்மானித்துக் கொண்டு மாலைப்போதில், சூரியன் அஸ்தமிக்கும்போது தன்னூரிலிருந்து புறப்பட்டு நெடுங்குன்றத்தை நோக்கி அதிவிரைவாய் நடக்கலுற்றார்.

அங்ஙனம் நடந்து செல்கையில், இடையில், ஒரு சிறு காட்டுப் பிரதேசத்தைக்கடக்க நேர்ந்தது. இதற்குக் கீழ்ச் சேரிக் காடென்று பெயர். அக்காட்டில் நுழைந்ததும், அது கிருஷ்ணபக்ஷமாதலால், இருள் சூழ்ந்து கொண்டது; வழியோ புலப்படவில்லை. இங்ஙனம் தவித்துக்கொண்டிருக்கும்போது "எங்கே போகிறாய்? நில்." என்று ஒரு சப்தம் கேட்டது.

அச் சப்தத்தைக் கேட்டதும், நரசய்யர் நாற்புறமும் சுற்றிப்பார்த்தனர். யாரும் தனது கண்களுக்குப் புலப்படவில்லை. மறுபடியும் வேகமாய் நடக்கத் தொடங்கினார்.

உடனே, "உன்னிஷ்டம் போல் பிராணனை விட்டுவிடலாமென நினைத்துக் கொண்டிருக்கின்றனையோ?" என்று மறுபடியும் ஒரு சப்தம் கேட்டது. அந்தணர் திகைத்துத் தனக்குள், "சாகத்துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்காலாழம்" என்று நினைத்துப் பிராணனை மாய்த்துக் கொண்டு என் பிராரப்தத்தை யொழிக்க நான் போய்க்கொண்டிருக்கும்போது என்னை யார் தடுப்பது அன்றியும், என்மனத்தின் தீர்மானத்தை யாரொருவனன்,

வேறொருவரும் அறியாரே" யென்று யோஜித்து மறுபடியும் நாற்புறமும் சுற்றிப்பார்த்தனர்.

## ஆண்டவனது அருள் விலாசம்

அப்பொழுது கையில் தடியை ஊன்றித் தாங்கி, வயது முதிர்ந்த நிலைமையினால் சிரம் நடுங்கிக்கொண்டும், கால்கள் தள்ளாடிக்கொண்டும் ஒரு கிழவர் பரமசாந்தமான முக விலாஸத்தோடு கூடியவராய்த் தென்பட்டனர்.

அக்கிழவரைப் பார்த்ததும், நமது அந்தண சிரேஷ்டர் மிகவும் ஆச்சரியத்துடன் "இந்தக் கோலத்தோடல்லவா ஸ்ரீ ஷண்முகன் வல்லியை மணக்கச் சென்றது? அதே கோலத்துடன் என்னையும் ஆட்கொள்ள அடியேன் முன் நிற்கின்றனர்போலும்" என்று மனத்தில் நினைத்துக் கொண்டிருக்கையில், அவ்வயோதிகர் இரண்டு மூன்று பனைமர வுயரம் வளர்ந்து நீண்ட ஜடைகளோடு விளங்கினர்.

அவ்வுருவத்தைத் தரிசித்த மாத்திரத்தில் நாசய்யர் மெய்ம்மறந்து கற்சிலைபோல் நின்றுவிட்டனர்.

அப்பொழுது அப்பெரியார் "அப்பா! உன்னிஷ்டம் போல் உனதுயிரை விட்டுவிடலா மென்று தீர்மானித்துக் கொண்டு போகும் நீ இப்பொழுது உன் உயிரை விட்டு விடு; நான்பார்க்கிறேன்." என்று கூறினர்.

அந்த வாக்கியத்தைக் கேட்டதும், ஸ்ரீ தணிகாசலேசனே தம்மைக்காக்க இக்கிழக் கோலத்துடன் வந்திருக்கின்றார் என்று நிச்சயித்துக் கொண்டு, "ஸ்வாமீ! அடியேனுக்கு ஏற்பட்ட இந்த சூலை நோயானது பொறுக்க முடியாத துன்பத்தை யுண்டாக்கியதால் அடியேன் உயிரை மாய்த்துக் கொள்ளத்தீர்மானித்தது உண்மையேயாகும். அக்குற்றத்தை மன்னித்து அக்கொடிய நோயின் துன்பத்தினின்றும் அடியேனை விடுவித் தாட்கொள்ளல் வேண்டும்". என்று பன்முறை மன்றாடி யடியற்ற மரம்போல் விழுந்து நமஸ்கரித்து வேண்டிக் கொண்டனர்.

அவ்வேண்டுகோளுக் கிரங்கி அம்முதுமுனிவர் "அப்பா! முற்பிறவிகளிற் செய்த பாபகர்மாக்கள் இப்பிறவியில் நோய்வடிவமாய்த் தோன்றிச் சரீரத்தைப் பீடிப்பது தர்ம சாஸ்திரஸித்தாந்தம். விவேகிகள் அங்ஙனம் ஸம்பவித்த வியாதியைப் பிராரப்த ரூபமாக எண்ணி மிகவும் அமைதியோடு அநுபவித்திருப்பார்களே யொழிய, அதற்காகச் செத்துச் சாம்பராக மாட்டார்கள்; போனது போகட்டும். உன் வியாதியைப் போக்க இப்பொழுது மருந்தொன்று தருகிறேன். அதோ சிறிது தூரத்தில் காணப்படும், விளக்கொளியோடு கூடிய, சிறிய குடிலுக்குச் சென்று நான் கேட்டதாய்ச் சொல்லிச் சிறிதளவு வெண்ணெய் வாங்கிக் கொண்டுவா" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

அங்ஙனமே அந்த சிரேஷ்டராகிய நரசய்யரும் தீபப் பிரகாசத்தோடு கூடிய அவ்வீட்டிற்குச் சென்று "அம்மா! சிறிதளவு வெண்ணெய் கொடுங்கள். அப்பெரியாருக்கு வேண்டுமாம்" என்று கேட்டனர்.

உடனே, அவ்வில்லத்திலிருந்து ஒருமாது வெளியே வந்து, ஒரு வார்த்தையும் பேசாது கொஞ்சம் வெண்ணெயைக் கொடுக்க அதைப் பெற்றுக் கொண்டு ஐயர் அம்முதியவரின் சமீபத்திற்கு வந்து அதை யவரிடத்தில் தந்தனர்.

மூவுலகங்களையும் தனது இச்சாமாத்திரத்தினல் மோஹிக்கச் செய்யும் அக்கிழக்குமாரனும், ஐயர் தந்த நவநீதத்தைத் தனது கைகளால் வாங்கித் தனது காலடிக்குக் கீழே யுள்ள ஒரு பச்சிலையைப் பறித்துக் கையில் வைத்துக் கொண்டு தனது திருவாயால் ஊதினர். உடனே அப் பச்சிலையானது தீப்பற்றி யெரிந்து சாம்பரானது. அச்சாம்பரை (பஸ்மாவை) அவ்வெண்ணெயில் குழைத்து ஐயரவர்களின் நாவில் தடவி "மைந்தா! இதை விழுங்கு; இதனல் உனக்குற்ற நோய் அகலும்" என்றனர்.

உடனே ஐயர், "இம்மருந்தானது அடிக்கடி தாயின் கர்ப்பத்தில் வருந்தி, எண்ணிறந்த ஜன்மங்களை யெடுத்துப்

பற்பல விதமான துன்பங்களை யநுபவித்து மரித்து, மறுபடியும் ஜனன மெடுக்கும் பாவியேனுக்குப் பிறப்பிறப்புக்களை யொழிக்கவல்ல சிறந்த ஔஷதமேயாகும்: அன்றியும், இது, இச் சமுசார ஸாகரத்திலிருந்து கரையேற்றுவிக்கும் ஒரு சிறந்த ஓடமுமாகும். " என்று பாவித்து அதை விழுங்கினார்.

விழுங்கினவுடன் ஐயர் மெய்ம்மறந்தார். மூர்ச்சித்தார்; பன்முறை வமனஞ் செய்தார்: பூமியின் மேல் விழுந்து புரண்டார். பிறகு சிறிது நேரங் கழித்து அய்யருக்குப் பிரக்ஞை வந்தது: கண் திறந்தார். திகைத்து நாற்புறமும் விழித்துப் பார்த்தார். கிழவனைக் காணவில்லை. ஆனால் கிழவர் நின்றிருந்த விடத்தில் கண்ணொளி மயங்கும் படியான மஹாப்பிரகாசத்தோடு கூடிய ஒரு திவ்விய மங்கள ஸ்வரூபத்தைத் தரிசித்தார். அந்தஸ்வரூபம்,

अयुतादित्यसङ्काशं चन्द्रकोटिसुशीतलम् । महावाक्यसुलक्ष्यार्थं संशोभिचरणद्वयम् ॥ अखण्डैकरसब्रह्म सच्चिदानन्दविग्रहम् । शिववाक्यैक्य-संभूतमहदानन्दसागरम् ॥ अखण्डाकारवृत्याख्यशक्तिहस्तं महागुरुम् । सत्तास्वरूपज्ञानाभं द्वैतभ्रान्तिनिवारकम् । मुकुक्कुटं धारयन्तं ध्वजे त्रिगुणवर्जितम् ॥

१. नानाविधविचित्राख्यत्रैगुण्याख्यप्रपञ्चकनामरूपसुविस्तृतपिञ्छाख्य त्रिगुणात्मकशुद्धमायास्वरूपमयूराधिष्ठितम् ।

२. बाह्यानुविद्धसमाध्यखण्डाकारवृत्तिस्वरूप देवसेनापतिम् ।

३. आन्तरानुविद्धसमाध्यात्मगोचरवृत्तिस्वरूप श्रीवल्लीपतिम् । भास्वन्तं दहराकाशे गुरुरूपिणमव्ययम् । एतन्मनोहरं रूपं दृष्ट्वा संभ्रान्तमानसः ॥

## ஆண்டவன் தரிசனம்

( இதன் பொருள் ) பதினாயிரம் ஸூர்யர்கள் ஒன்று சேர்ந்து உதித்தது போன்ற மஹாப்பிரகாசத்தோடு கூடியதாயும், கோடி சந்திரர்கள் ஏககாலத்தில் உதித்தால் எவ்வளவு

குளிர்ச்சியாயிருக்குமோ அவ்வளவு குளிர்ச்சியாயும் உள்ள ரூபத்தோடு கூடியவராயும், மஹாவாக்கியங்களுக்கு லக்ஷ்யமான ஞான விளக்கவடிவ சரணங்களோடு கூடியவராயும், ஸத்தாஸ்வரூபமான சித்பிரகாசத்தால் துவைதப் பிராந்தியை நிவர்த்திக்கக் கூடியதும், முக்குணங்களால் பாதிக்கப் படாததுமான குக்குடத்தைத் துவஜமாகவுடையவராயும், நாநாவித விசித்திரதர அலங்காரம் பொருந்திய முக்குண பிரபஞ்ச நாமரூபவிலாஸமான கலாபத்தை விரித்தாடா நின்ற சுத்தமாயை யென்னும் மயூரத்தின்மேல் ஆரோகணித்து விளங்கும் அதிஷ்டான ஸ்வரூபராயும், பாஹ்யாநுவித்த ஸமாதியில் எதிரிட்டறியக் கூடியதான அகண்டாகார வ்ருத்திஸ்வரூப தேவஸேநாபதியாயும், ஆந்தராநுவித்த ஸமாதி நிஷ்ட ஆத்மகோசர வ்ருத்திஸ்வரூப வல்லீஸமேதராயும், ஸர்வப்பிராணிகளின் ஹிருதயத்தில் விளங்கும் குஹராயும், குருமூர்த்திஸ்வரூபராயும், மனதுக்கு மிகவும் ஸந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியவராயுமுள்ள ஆண்டவனது திவ்விய மங்கள வடிவமாகும்.

இத்தகைய வடிவத்தைத் தரிசித்ததும் அந்தணர் மெய் புளகிக்க, என்பு நெக்குருக, கண்களில் ஆநந்த பாஷ்பம் சொரிய, வாய்குழறக் கீழ்க்கண்டவாறு குஹேசனைத் துதிக்க வாரம்பித்தனர்.

मायामोहमदाज्ञाननाशिने महसे नमः ।
मच्चित्तकमलार्काय महनीयपदाय ते ॥

पूर्णाचलेशाय पुरारि सूनवे
चूर्णीकृताराति शिरोरुबाहवे ।
वर्णादिरूपाय सहस्रभानवे
स्वर्णाद्रिवासप्रभवाय ते नमः ॥

षड्वक्त्रैः परिशोभितं त्रिणयनं भास्वत्किरीटान्वितम्
शक्त्याद्यायुधशोभितैर्द्विदशकैः हस्तैस्सुसंराजितम् ।
पार्श्वाश्लिष्टसुरेन्द्रजावनिजयादेदीप्यमानं गुहम्
शूलव्याधिहरं सुरेन्द्रविनुतं पूर्णाचलेशं भजे ॥

(தாத்பர்யம்) (1) மாயையாலேற்பட்ட மோஹம், மதம், அஞ்ஞானம் முதலியவற்றை நாசமாக்கி, ஸ்வயம் பிரகாசமாய் விளங்கும் தேஜோ மூர்த்தியை நமஸ்கரிக்கின்றேன்.

அஞ்ஞானமாகும் காரிருளால் மூடப்பட்டுள்ள என் சித்தமாகிற கமலத்திற்குச் சூரியனைப்போல் பிரகாசிப்பனவாயும், மிகவும் உத்க்ருஷ்டமாய் விளங்குவனவாயுமுள்ள உமது சரணங்களுக்கு நமஸ்காரம்.

(2) முப்புரங்களை நீறுக்கிய முக்கண்ணனது புதல்வனையும், எதிரிகளான சூராதி அஸுரர்களின் அங்கங்கள் பதற வெட்டித் தள்ளி தாளாகச் சிதறவடித்தவராயும், தனது சரணங்களில் சரண்புகுந்தவர்களின் அக்ஞான இருளைப் போக்குதற்கு ஆயிரம் சூரியர்களின் பிரகாசத்தைப் போற் பிரகாசிப்பவராயும், மஹாமேருவை இருப்பிடமாகவுடைய பரதேவதையின் செல்வப்புதல்வராயும் விளங்கும் ஸ்ரீபரிபூர்ணசல மென்னும் தணிகை மலைமேல் வீற்றிருக்கும் குஹனை வணங்குகின்றேன்.

(3) ஷண்முகங்களோடும் மூன்று நேத்திரங்களோடும் நவரத்தின மயமான கிரீடத்தோடும், தனது பன்னிரண்டு கைகளிலும் விளங்கும் வேல் முதலிய ஆயுதங்களோடும் விளங்கி, இருபுறங்களிலும் விளங்கும் தேவஸேநாவல்லீ ஸமேதராய், அடியேனது சூலை நோயைத் தீர்க்கின்றவரும், இந்திரன் முதலிய தேவர்களால் வணங்கப்பட்டவருமான ஸ்ரீ தணிகாசலேசனைப் பஜிக்கின்றேன்.

இங்ஙனம் துதித்துக் கொண்டு ஐயர் அவர்கள் ஆநந்தக்கடலில் மூழ்கினர். குஹன் தனது நிஜவுருவத்தை மறைத்துக் கொண்டு பழைய வயோதிகர் வடிவத்துடன் தோன்றினர்.

பரவசப்பட்டு ஆநந்தக்கடலில் திளைத்து நிற்கும் நாசய்யரைப்பார்த்து "அப்பா! உனக்கினி இந்நோயால் தொந்தரவு இராது. இதோ இந்த மூலிகையைத் தெரிந்து கொள். இது உனக்குற்ற சூல நோயை நீக்கவல்லது: நோய் காணும் போதெல்லாம் சாப்பிடு; அது உடனே யொழியும்.

எந்தக் காலத்தில் இந்த ஔஷதத்தால் ரோய் தீரவில்லையோ, அந்தக் காலமே நீ என் சரணங்களை யடையுங்காலமெனத் தெரிந்து கொள். இனிப் பவரோயின் நிவர்த்திக்கான ஔஷதமும் தருகின்றேன் " என்று திருவாய் மலர்ந்தருளி ஐயரின் நாக்கை நீட்டச்சொல்லி ஸ்ரீ ஷடக்ஷர மந்த்ரத்தை யெழுதி, மஹாவாக்கியத்தையும் உபதேசித்து " அப்பா! நீ என்னை யுத்தேசித்து வருஷா வருஷம் பதினாயிரம் பிராஹ்மணர்களுக்கு அறுசுவையோடு கூடிய அந்நமளிக்க வேண்டும்; அதுமுடியுமா?" என்றுவினவினர். அப்பொழுது அய்யர் அவர்கள் ஆச்சரிய மடைந்து "ஷண்முகா! நீ எல்லாப் பிராணிகளிடத்திலும் அந்தர்யாமிஸ்வரூபியாய் ஒருவனாகவே யிருந்து (அவரவரது ஆத்மஸ்வரூபமாய்) விளங்குகின்றனையன்றோ? ஆதலால் யான் ஒரு அந்தணருக்கு அந்நமளிக்கின், அதனால் பலகோடி ஜீவர்களிலும் அந்தர்யாமியாயுள்ள நீ திருப்தியடைய வேண்டுமல்லவா? ஆதலால் யான் ஓர் அந்தணருக்கு அந்நமளிக்கின்றேன்" என்று கூறினார்.

குமரனை அந்த வயோதிகரும் சமத்காரமான அவ்வார்த்தையைக் கேட்டு மிகவும் ஸந்தோஷமடைந்து " அப்பா! உன்னைச் சோதிப்பதற்காகவே நாம் இவ்வாறு கூறினோம். உன்னுடைய வார்த்தைகள் மிகவும் விவேகத்தோடு கூடியிருக்கின்றன; அப்படியே செய். ஆனால் நீ என் ஸந்நிதி (திருத்தணி) யில் ஒருவருஷத்திற்கு ஒருமாதமாவது இருக்க வேண்டும். உன் மனம் எப்பொழுதும் எனது சரணங்களில் ஈடுபடல் வேண்டும். உனக்கு ஒரு புத்திரியும் மூன்று புத்திரர்களுமுண்டு. புத்திரர்களில் மூத்தவன் விவேகியாய் இருப்பான். அவனையும் யாமே அருள் புரிவோம்." என்று கூறிக் கொண்டே வயோதிகரூபத்தை மறைத்துக் கொண்டனர்.

அந்தணரும், தேசிக ரூபங்கொண்டு தன்னை யநுக்கிரஹித்த குஹன் மறைந்ததும், துக்க ஸமுத்திரத்தில் மூழ்கினவராய் ஓவென்றலறத் தொடங்கினார்.

"என் தாதா எங்கே? என்னை யநுக்கிரஹித்த குமரன் எங்கே? என்னை விட்டு அவர் எங்கே சென்றிருப்பார்? அஞ்ஞானமாகிற கூபத்தில் விழுந்து வெளியேற முடியாமல் தவிக்கும் அடியேனை வெளியேற வைத்த என் பெரியார் எங்கே? சரவணபவா! குஹா!! ஷண்முகா!!! கருணைக் கடலே!! ஞானத்தை யருளவந்த ஞான தேசிகா!! கொடிய நோயை நீக்கவந்த வைத்தியநாதா!! தாதா! தாதா!!" என்று பயித்தியம் பிடித்தவர்போல் அவ்வந்தணர் கதறிக்கொண்டிருக்கும்பொழுது, அவ்வழியாய்ச் சண்டாள ஜாதியைச் சேர்ந்தவனும், அவ்வந்தணரது கிராமத் தலையாரியுமான ஒருவன் வந்தான்.

தலையாரி யாகும் அச்சண்டாளனைக் கண்டவுடன், அந்தணர், அவனை அப் பெரியவரெனத் தீர்மானித்து அவனை யிறுகக் கட்டியணைத்துக் கொண்டு "தாதா! என்னை யேமாற்றிவிட்டு எங்கே சென்றீர்கள்? யான் இனி யும்மை விடமாட்டேன்." என்று கூறினார்.

சண்டாளன், அவ்வந்தணரைப் பார்த்து "சுவாமீ! நான் தலையாரி தஞ்சான் அல்லவா? என்னைத் தாங்கள் தீண்டுதல் கூடுமா? என்னை விட்டு விடுங்கள், விட்டு விடுங்கள்" என்று எவ்வளவு தூரம் சொல்லியும் நரசய்யர் அவனை விடாமல் பலமாய் இறுகப் பிடித்துக் கொண்டனர்.

தலையாரி தஞ்சானும் அவரது பிடியினின்றும் திமிறிக் கொண்டு ஓடோடியும் போய்ச் செப்பிடாங் குளத்திற்குச் சென்று, அய்யரது வீட்டில் "அய்யாவுக்குப் பயித்தியம் பிடித்துக் கீழ்ச்சேரிக் காட்டில் தாதா!, தாதா!! வென்று கதறிக் கொண்டு அலைகின்றார்." என்று கூறிவிட்டுப் போனான்.

உடனே அய்யரது மைத்துனர் சிவராமய்யர், சிற்றப்பாவின் புத்திரர் சூரிய நாராயணய்யர், கிருஷ்ணஸாமய்யர் முதலியவர்கள் தீ வத்திகளுடன் புறப்பட்டு அக்காட்டிற்குச் சென்று "தாதா தாதா" வென்று கதறிக்கொண்டிருக்கும் அவரிடம் "உங்கள் தாதா நமது வீட்டிற்கு

வந்திருக்கிறார். அவர் அங்கே உம்மை அழைத்துவரச் சென்றார். வாருங்கள் போவோம்." என்று கூறித் தந்திரமாய் அய்யரை அழைத்துக்கொண்டு செப்பிட்டாங் குளத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

வந்ததும், அய்யரவர்களைப் பந்துக்கள் முதலிய யாவரும் சூழ்ந்துகொண்டு பற்பல கேள்விகளைக் கேட்டனர். எவர் எதைக் கேட்டாலும், தாதா தாதா வென்னும் ஒரு பேச்சைத் தவிர மற்று வேறொரு வார்த்தை யவர் வாக்கினின்றும் வரவில்லை. இங்ஙனம் ஐந்தாறு நாட்கள் சென்ற பின், அவருக்குச் சக்திபாதத்தின் வேகம் சற்று குறைந்து மனோ வ்ருத்தியோடு கூடியவரானார். அப்பொழுது தன்னை வினவி யவர்கட்கு நடந்த வர்த்தமானங்கள் யாவற்றையும் ஆதியோடந்தமாய் விவரித்துக் கூறினார்.

குஹேசனது அருள் விலாசத்தைக் காதாரக்கேட்ட அய்யரவர்களின் பந்துக்களும், சினேகிதர்களும் மிகவும் ஆச்சரிய மடைந்து "இக்கலிகாலத்திலும் இத்தகைய திரு விளையாடல்கள் நடக்கின்றனவா? என்னே ஆச்சரியம்!" என்று வியந்து ஸந்தோஷ பரிதர்களாய் முருகனிடத்தில் பேரன்பு பூண்டு பக்தி செய்துக்கொண்டு வந்தார்கள்.

அய்யரவர்களும், "காணப்படும் இப்பிரபஞ்சம் யாவும் என்னை யாட்கொண்ட அறுமுகன் ஸ்வரூபமே" என்னும் திடமான எண்ணத்துடன் மானஸிகமான பராபூஜையைச் சதா யியற்றிக்கொண்டு ஸ்ரீ குஹபக்தியான தற்பரராய் விளங்கிக்கொண்டு வந்தனர். அய்யரவர்கட்குப் பரம்பரையாய் ஏற்பட்ட பிராஹ்மண புரோஹித வ்ருத்தியிருந்தது. இதைக்கொண்டு தனது இல்லறத்தை அநாயாசமாய் நடத்திக்கொண்டு வந்தார்.

இங்ஙனம் இருக்க, ஒரு நாள், க்ருத்திகை தினத்தன்று ஒரு வெங்கடாசலய்ய ரென்பவர் தன் தகப்பனாரின் சிரார்த்தத்திற்கு நமது அய்யரை யொரு பிராஹ்மணராக வரித்தார். வேறு யாவரும் கிடைக்காததால், சிரார்த்தம் நஷ்டமாகின்றதே யென்று யோசித்து அன்று விரததின மென்பதையும்,

நஹனை பாஹ்யமாய்ப் பூஜிக்கும் நாமென்பதையும் அறிந்திருந்தும், அதைப் பொருட்படுத்தாமல் சிரார்த்தத்திற்கு வருவதாய் ஒத்துக்கொண்டார்.

அன்று காலையில் தனது கிராமத்திலிருந்து புறப்பட்டு சுமார் மூன்று மைல் தூரத்திலுள்ள விளாநல்லூர் என்னும் கிராமத்தில் நடக்கும் அச்சிரார்த்தத்திற்குப் போய்க் கொண்டிருந்தனர். போகும் வழியில் ஒரு பெரிய ஸர்ப்பமானது அய்யரவர்களின் வலதுகாலைச் சுற்றிக்கொண்டது. உடனே அய்யர் தன்னையும் உலகத்தையும் மறந்து, ஆழ்ந்த ஸமாதியில் நின்று விட்டனர். பகல் பன்னிரண்டு அல்லது ஒருமணி வரையில் ஸர்ப்பம் காலை விடவேயில்லை. பிறகு தானாகவே விட்டுவிட்டு ஓடிப்போயிற்று; அய்யரவர்கட்கும் பிரக்ஞை வந்தது. வந்ததும், அய்யர் மிக வேகமாய் நடந்து சிரார்த்த கர்த்தாவின் வீட்டை யடைந்து பார்க்கும்போது தற்செயலாய்க் கிடைத்த ஒரு பிராஹ்மணரை வைத்துக் கொண்டு சிரார்த்தத்தை நடத்தி, அது முடியும் ஸமயமாய் இருந்தது. அய்யர் அங்குச் சென்றவுடன் ஆங்குள்ளவர்கள் திகைத்து நின்றனர். அய்யரும் சிரார்த்தம் முட்டின்றி முடிந்ததே யென்னும் பேருவகையோடு குஹேசனைத் தியானித்தனர்; வழியில் ஏற்பட்ட ஸம்பவங்களையெல்லாம் விசதமாய்க்கூறிக் கார்த்திகேயனது அருளையும் பெருமையையும் புகழ்ந்துத் துதித்தனர். அங்கிருந்த அனைவரும் அதைக்கேட்டு ஸந்தோஷபரிதர்களாய், அய்யரவர்களது பக்திக்கு மெச்சித் தாங்களும் முருகனை வழிபடத் தொடங்கினார்கள். பின், அய்யரவர்கள் கிருத்திகை யன்று வழக்கப்படி செய்யவேண்டிய பாஹ்ய பூஜையைச் செய்து முடித்துப் போஜனம் செய்து தமது கிராமத்திற்குத் திரும்பி வந்து சேர்ந்தனர்.

அந்த ஸம்பவத்திலிருந்து அய்யரவர்கள் கிருத்திகை விரதத்தைத் தவறாமல் அநுஷ்டித்து வந்து குஹனை யந்தரங்கமாய் உபாஸித்து வந்தனர்.

இங்ஙனம் இருந்து வருகையில், அய்யரவர்களின் மனைவி அம்மாயி அம்மாள் கந்தன் கழலிணையிற் கலந்தனள்.

அவ்வருஷத்திலேயே நமது அய்யரது மாமனாராகிய புதுப்பாளையம் குப்பய்ய ரென்பவர், மாப்பிள்ளையின் பக்திக்கும் அவருக்கேற்பட்ட திருவருளுக்கும் ஸந்தோஷப்பட்டுத் தனது மூன்றாவது புதல்வியாகும் காமாக்ஷியம்மாளை யவருக்குக் கன்யாதானம் செய்துக் கொடுத்துத் தனது சொந்தச் செலவிலேயே விவாஹம் நடத்தி முடித்தனர்.

காமாக்ஷியம்மாளும், நரசய்யர் அவர்களும் ஸ்ரீபார்வதி பரமேஶ்வரர்கள்போல் உடலிரண்டும் உயிரொன்றுமாக வெகு ஸந்தோஷத்தோடு மனமொத்துக் குமரனைப் பஜித்துக் கொண்டு வந்தனர்.

இங்ஙனம் இல்லறம் நடத்திக்கொண்டு வருகையில் ஆண்டவனது உத்தரவுபடி முதலில் ஒரு புத்திரி பிறந்தனள்.

## ஜனனம்

பிறகு ஏழுவருஷங்கள் கழித்துச் சித்திரபாநு வருஷம் (கி. பி. 1882) ஐப்பசிமாதம் 30௳, சாந்த்ரமான கார்த்திக, சுக்கிலபக்ஷ சதுர்த்தி; பாநுவாரம், மூலா நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில், விருஷபலக்கினத்தில் அடியேனது குருநாதனாகிய ஸுப்பிரஹ்மண்யத்தைக் காமாக்ஷியம்மாள் ஈன்றனள்.

குமரனைக்கண்டு ஜகன்மாதா களிப்புற்றதுபோல் நமது காமாக்ஷியம்மாளும் தானீன்ற புருஷ சிசுவைக்கண்டு பேரானந்தக்கடலில் மூழ்கினாள்.

புத்ரோத்ஸவவார்த்தையைச் செவியுற்ற நரசய்யரும் இன்பக் கடலில் மூழ்கி, விதிப்படி அப்பொழுதே செய்ய வேண்டிய ஜாதகர்மாவைச் செய்துமுடித்துப் பதினோராம் நாளில் நாமகரணமும் செய்தனர். ஸ்ரீ தணிகைக் குமாரனது பேரருளால் ஏற்பட்ட குழவியாதலின் சிசுவுக்கு ஸுப்ரஹ்மண்யன் என்று நாமகரணஞ் செய்தனர்.

அப்பொழுது நமது அய்யரின் தமையன் புதல்வர் (அவர் பெயரும் நரசய்யரே) அக்குழந்தைக்கு "ஸச்சிதா

நந்தன் என்னும் ஒரு சிறப்புப் பெயரையிட்டனர். இந்நாம தேயம் இக்குழவிக்கு அந்வர்த்த நாமமாய் ஆய்து பின் சரித்திரத்தால் நன்கு விளங்கும்.

பின்னர், அக்குழந்தையின் தாய் தந்தைகள் பாலகனைக் கண்டு களித்து, அந்த அந்த காலத்தில் செய்யவேண்டிய தான அந்நப்பிராசனம், அப்தபூர்த்தி, சௌளம், அக்ஷராப்பியாஸம், உபநயனம், முதலிய விதயுக்த ஸம்ஸ்காரங்களைச் சரிவர நடத்திக்கொண்டு வந்தனர். இடையே வருஷா வருஷம் தணிகேசனது ஆணையின்படி திருத்தணியில் குடும்பத்தோடு இருந்துகொண்டு சரவணபவனது ஸேவை யைச் சரிவரச் செய்துகொண்டு வந்தார்கள்.

## வித்யாப்பியாஸம்

அடியேனது ஸற்குருநாதனும் ஆந்த்ரபாஷையைச் சரிவரக்கற்று, உபநயன மானபின், ஸாங்கமாய் வேதத்தை யத்தியயனம் செய்யாவிடினும், நித்திய, நைமித்திக, ஸ்மார்த்த கர்மாக்களுக்கு அத்தியாவஶ்யமான மந்த்ரபாகங் களைத் தனது தந்தையிடத்தில் அத்தியயனம் செய்து வந் தனர். வயது பதினொன்றாயிற்று. இடையில் வெங்கடராமன் குப்புசாமி என்னும் இரண்டு தம்பிகள் பிறந்தனர்.

## விவாஹம்

அடியேனது குருநாதனுக்குப் பதினாறு வயதானதும், அவரது தகப்பனார், தாயார், பந்துக்கள், முதலியவர்கள் அவ ருக்கு விவாஹம் செய்துவைக்கத் தீர்மானித்தனர். அங் ஙனமே, சென்னை, பறங்கிமலைக்கடுத்த பழவந்தாங்கலைச் சார்ந்த நங்கை நல்லூர் என்னுங் கிராமத்தில், தாயார் வழி யில் நெருங்கிய பாந்தவியமுள்ள, ஒரு, காஶ்யபகோத்திரத் தைச் சார்ந்த ராமஸ்வாமி அய்யாவின் நப்த்ரியும், ஸுப்பிரஹ்ம ண்ய அய்யரது பௌத்ரியும், சேஷய்யாவின் புத்திரியு மான, ஸ்ரீவிசாலாக்ஷியம்மாளை விவாஹம் செய்வித்தனர்.

அதேமாதத்தில், வெங்கடராமய்யருக்கு உபநயனமு மாயிற்று. இவரது படிப்பை யுத்தேசித்துக் காஞ்சிபுரத்தில்

குடியிருக்கும்படி நரசய்யர் தீர்மானம் செய்து அங்ஙனமே ஏற்பாடு செய்தனர். 1898-ல் தனது தம்பிமார் இருவரையும் அழைத்துக்கொண்டு குருநாதர், காஞ்சீபுரம் வந்தார். தம்பிகளை ஸ்கூலில் சேர்த்தார். இப்படியிருக்கும்போது தனக்கும் ஆங்கிலம் கற்கவேண்டுமென்னும் எண்ணம் தீவிரமாய் ஏற்பட்டது. அப்படியே ஒரு B. C. வைத்தியநாதய்யர் என்பவருடைய ஸஹாயத்தால் அவ்வருஷம் பிரைமெரி பரீக்ஷையில் தேறினர். மறுவருஷத்தில் முதல்பாரம் இரண்டாம்பாரம் படிப்புகளை முடித்து 1900-ல் லோயர் ஸெகண்டெரி பரீக்ஷையில் சென்னைராஜதானியில் மூன்றாவதாகத் தேறினர். அதனால் 1901-ல் ஐந்தாவது பாரத்திற்கு இரட்டைப் பிரமோஷன் ஏற்பட்டது. மூன்று மாதம், ஐந்தாவது பாரத்தில் வாசித்தார்.

## தந்தையாரின் விதேஹமுக்தி

குருநாதரின் தகப்பனார் நரசய்யர் 1901-ல் மார்ச்சு மாதத்தில் சார்வரிஹு பால்குந கிருஷ்ணபக்ஷ பஞ்சமியன்று ஸ்ரீதணிகாசலபதியின் பாதங்களில் இரண்டறக்கலந்தனர்.

அதன் வரலாறு:—பால்குன(பங்குனி) சுக்கில பௌர்ணமி உத்திரத்தன்று பங்குனியுத்திரம் காஞ்சியில்நடந்தது. அப்போது யாவரும் காஞ்சியில் இருந்து திருக்கல்யாண மஹோத்ஸவத்தைத் தரிசித்து இன்புற்றிருக்கையில், மறுநாளே, அய்யரவர்களுக்குப் பழையபடி சூலநோய் கண்டது. அன்றே யறுமுகன் காட்டிக்கொடுத்த மூலிகையைக் கொணர்ந்து பஸ்மமாக்கிச் சாப்பிட்டார்; அதனால் நோய் தீரவில்லை. அய்யரவர்கட்குக் குமரன் கூற்று ஞாபகத்திற்கு வந்தது. பகவானோடு கலக்கும் நாள் கிட்டியதென்றுஅறிந்தார். உடனே ஒரு வண்டியை யமர்த்திக்கொண்டு காஞ்சீபுரத்திற்குப் பத்துமைல் தூரத்திலுள்ள புதுப்பாளையத்திற்குப் புறப்பட்டார். திரிதியையன்று புதுப்பாளையம் போய், மறுநாள் வெள்ளிக்கிழமை விசாகத்தன்று யாவரையும் மங்கள ஸ்நானம் செய்துகொள்ளச்செய்து, குஹேசனது பாஹ்ய பூஜையைச் செய்து முடித்து, அடியேனது குரு

நாதருக்கு, ஆண்டவன் தனக்கருளிய ஸ்ரீஷடக்ஷரமந்த்ரத்தை யுபதேசித்துத் தணிகேசனது இன்னருள் தனக் கேற்பட்ட விதத்தை ஆதியோடந்தமாய் விவரித்துக்கூறித் தணிகைக். குஹனிடத்தில் இடையரு அன்பிருக்குமாறு ஆசீர்வதித்து மறுநாள் பஞ்சமியன்று பகல் சுமார் இரண்டு மணிக்குப் பகவானோடு ஐக்கியமானார். அய்யரவர்களுக்கு நடக்க வேண்டிய உத்தரக்கிரியைகள் யாவும் விதிப்படி செய்யிட் டாங் குளத்தில் நடந்தேறின.

## உத்தியோகம்

குருநாதருக்குக் குடும்பபாரத்தை வஹிக்கும் கடைமை ஏற்பட்டது. படிப்பை நிறுத்தினார். 1901-ம் வருஷத் திலேயே செங்கற்பட்டில் **Reformatory** ஸ்கூலில் ஐந்தாவது உதவி உபாத்தியாயருக்காகப் பதிலாய் அமர்ந்தார். சுமார் ஒருவருஷம் வேலைபார்த்துக் காயமான உபாத்தியாயர் வந்தவுடன், செங்கற்பட்டு தாலுக்கா ஆபீஸ் குமாஸ்தாவுக்குப் பதிலாக வேலைகிடைத்தது. அந்த ஆக்டிங்கு காலமும் முடிந்தவுடன், காஞ்சிபுரம் ஸப்ரிஜிஸ்தரார் ஆபீஸில் ஒரு குமாஸ்தா வேலைகிடைத்தது. 1903 டிசம்பர் மாதம் வரையில் காஞ்சிபுரத்தில் இருந்து, 1904-ம் வருஷத்தில் சைதாப்பேட்டை டிரெயினிங்ஸ்கூலில் டிரெயினிங்குக் காகச் சென்று அதில் தேர்ச்சிபெற்றார். 1905ளு ஜூன் மாதம் சென்னை கார்ப்பொரேஷன் பால போதனா முறைப் போதகாசிரியராக அமர்ந்தார். பின் 1913-ம்ளு பிப்ரவரி மாதம் சென்னை, திருவல்லிக்கேணி, வல்லப அக்ரஹாரம் கார்ப்பொரேஷன் மாடல் ஸ்கூல் ஹெட்மாஸ்டராக அமர்ந்தார். அது முதல் சுமார் இருபத்தைந்து வருஷம் அதே ஸ்கூலில் தலைமை உபாத்தியாயராக இருந்து 1937-ம்ளு ஆகஸ்டு மாதத்தில் உபகாரச் சம்பளம் **(Pension)** பெற்று லௌகிக விவகாரத்தினின்றும் ஓய்வடைந்தார்.

# இடையில் ஸத்குரு தர்ஶனம்

சென்னை கார்ப்பொரேஷன் பால போதனா முறைப் போதகாசிரியராய் இருக்கும்போது, 1911-ம் ஜனவரி-பிப்ரவரி மாதங்களில் பிரயாகை யென்னும் க்ஷேத்திரராஜத்தில் பன்னிரண்டு வருஷத்திற்கொருமுறை ஏற்படும் கும்பமேளா ஸாதுஸங்கம் கூடிற்று. அப்பொழுதே மஹோதயபுண்ணியகாலமும் சேரும்படியிருந்தது. இவற்றை யெல்லாம் உத்தேசித்துக் குருநாதரின் தாயார் ஸ்ரீ காமாக்ஷியம்மாள் உத்தரதேச யாத்திரை செய்து, புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானமும், புண்ணிய காலத்தில் நைமித்திக கர்மாக்களும் செய்யவேண்டுமென்னும் தமது எண்ணத்தைத்தமது புத்திரரிடத்தில் தெரிவித்தனர். அந்தக் காலத்தில் அடியேனது குருபத்தினி ஸ்ரீ ஸௌ. விசாலாக்ஷியம்மாள் ஸீமந்த புத்திரனைப் பெற்றிருந்தாள். ஆதலின், குருநாதர் தன் தாயாரை மாத்திரம் அழைத்துக்கொண்டு, ஸாதாரண வருஷம், புஷ்ய பஹுள ஏகாதசியன்று (வியாழக்கிழமை) அல்ஹாபாத் (Alahabad) ஸ்டேஷனில் இறங்கி, மறுநாள் வெள்ளிக்கிழமை தாராகஞ்சு சிவமடத்தில் இருந்து, பிறகு அங்கிருந்து மறுநாள் ஒரு பைரவசாஸ்திரி வீட்டிற்குப் போனார். உடனே கங்கா தீரத்திற்குச் சென்றார். எண்ணிறந்த யோகிகளையும், ஞானிகளையும் தரிசித்தார். அங்ஙனம் பல ஸாதுக்களைத் தரிசித்துக்கொண்டு வருகையில் பரமசிவனது நெற்றிக் கண்களிலிருந்து வெளிக்கிளம்பின தேஜஸ்ஸுக்கு ஸமானமான வொளியோடும், விசால நயனங்களோடும், பரமாநந்தம் ததும்பும் முகமண்டலத்தோடும் விளங்கும் ஒரு மஹாத்மாவைக் கண்டனர். அவர் ஓர் அவதூதர். அவரைக் கண்டவுடனே "ஆஹா! இம்மஹாநுபாவர் என் தந்தையை ஆட்கொண்டருளிய ஸ்ரீஷண்முக மூர்த்தியின் ஸ்வரூபமே யாகும். இவர் அடியேனையும் ஆட்கொண்டருளவே இங்கு தோன்றி யிருக்கின்றனர்." என்று நினைத்து மெய்ம்மறந்து ஆநந்த பாஷ்பம் சொரிய அம் மஹாத்மாவின் பாதங்களில் அடியற்ற மரம்போல் விழுந்து நமஸ்கரித்து "ஸத்குரோ!

அடியேனை இச்சமுஸாரத் துன்பக்கடலினின்றும் கரை யேற்றி ரக்ஷிப்பீராக" வென்று கதறியழுதார்.

அப்பொழுது, கருணைக்கடலாயும் உத்தம பக்தர்களைக் காக்க வென்றே மனித சரீரம் தாங்கிக் கொண்டிருப்பவ ராயும், சிவ சக்தி ஐக்கிய ஞானத்தால் ஏற்பட்ட ஆநந்த ஸ்வரூபராயும் விளங்கும் அம்மஹான், "குழந்தாய்! எழுந் திரு; பயப்படாதே" என்று கூறித் தன் இரண்டு கை களாலும் வாரி யெடுத்துத் தழுவிக் கடைக்கண் பார்வை யாகும் அமிர்தத்தால் அஞ்ஞான வடிவ பாபத்தைக் கழுவி "நீ எந்த ஊர்? உனக்கென்ன வேண்டும்? என்று கேட் டனர்.

அதற்கு எனது குருநாதன் "ஸ்வாமின்! நான் தென் தேசவாஸி. ஸ்ரீ காஞ்சீபுரத்திற் பிறந்தவன். தற்காலம் சென் னைப் பட்டணத்தில் உத்தியோகத்தில் இருக்கிறேன். எனது தாயாருடன் கங்கா ஸ்நானத்திற்காகப் புறப்பட் டேன். மஹா மேளாவைத் தரிசிக்க இங்கு வந்தேன். அடியேன் பூர்வ ஜன்மங்களிற் செய்த மஹத்தாகிய புண் ணிய விசேஷத்தால் தங்களைத் தரிசிக்கும் பாக்கியம் பெற் றேன். தங்களது அநுக்கிரஹம் தவிர மற்றெதுவும் வேண் டிலேன்" என்று கூறினர்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் அப்பெரியார் சிறிது நேரம் கண்மூடித் தியானத்திலிருந்து புன்முறுவலுடன் "குழந்தாய்! நாளையதினம் கழித்து மறுநாள் திங்கட்கிழமை மஹோதய புண்ய காலம் வருகிறது. அன்று காலை ஸூர் யோதய காலத்திற்கு இங்கு வா." என்று திருவாய் மலர்ந் தருளினர்.

மஹாத்மாவின் சொற்படி, அன்று, அதாவது ஸாதா ரண வருஷம் தை மாதம் அமாவாஸ்யை திங்கட்கிழமை சிர வண நக்ஷத்திரம் கூடின சுபதினமாகும் மஹோதய மஹா புண்ணிய காலத்தில் ஸூர்ய உதயத்திற்கு, அடியேனது குருநாதன் அப்பெரியவரை யணுகி வந்தனம் செய்து நின்றனர்.

உடனே மஹாத்மா தீர்த்தபாத்திரத்தைக் கையால் எடுத்து, அதை யபிமந்த்ரணம் செய்து குருநாதருக்கு அபி ஷேகம் செய்வித்து, மஹாவாக்கியத்தை யுபதேசித்துப் பிறகு ஹம்ஸ மந்த்ரத்தையும், அதன் பிறகு ஸ்ரீவித்யா மஹாஷோட சியையும் உபதேசித்தனர்.

பின்னர், "குழந்தாய்! இப்பிரஹ்மவித்தைக்குக் குரு பரம்பரை யவசியம் தெரியவேண்டும். குருபரம்பரா ஞான மில்லாமல் ஆத்மஞானத்தில் தெளிவு ஏற்படமாட்டாது. ஆத லால் குருபரம்பரையை யுபதேசிக்கின்றேன் கேள். எனது தீக்ஷாநாமம் ஸ்ரீ குஹாநந்தநாதர்; என்குருவும் உனது பரமகுருவு மானவர் ஸ்ரீ ஆத்மாநந்த நாதர்; என்பரம குருவும், உன் பரமேஷ்டி குருவுமானவர் ஸ்ரீ பிரகாசாநந்த நாதராகும்; என் பரமேஷ்டி குருவின் பெயர் ஸ்ரீ விமலா நந்தநாதராவர்: இவர்கள் யாவரும் பரமஹம்ஸர்களே. எனது குருநாதராகிய ஸ்ரீ ஆத்மாநந்த நாதர் ஒரு மஹாயோகி. அவர் ஸ்ரீஸுப்ரஹ்மண்ய உபாஸனையின் கரைகண்டவர்" என்று ஸம்பிரதாயக் கிரமத்தையும், குருபாதுகா மந்த்ரத்தை யும் உபதேசித்ததோடு, ஸ்ரீ பிரஹ்மண்ய மந்த்ரத்தையும் அருளிச் செய்தனர். ஸ்ரீசிதாநந்தரென்னும் தீக்ஷாநாமம் என் குருநாதருக்கு இடப்பட்டது.

என் குருநாதனும், நித்திய தரித்திரனுக்கு அளவற்ற புதையல் கிடைத்தால் எப்படி அவன் ஸந்தோஷப் படுவனோ அதற்குப்பதினாயிரம் மடங்கு அதிகமாய் ஸந்தோஷப்பட்டுத் தன்னுடைய ஜன்மா கிருதார்த்த மாயிற்றென்னும் திட நம்பிக்கையோடு தன்னுடைய ஸத்குரு ஸார்வ பௌம ராகிய ஸ்ரீ குஹாநந்தநாத அவதூதரின் பாதங்களில் பன் முறை ஸாஷ்டாங்க நமஸ்காரங்கள் செய்துக் கைகட்டி வாய்புதைத்து நின்றனர். அவதூதராகிய அடியேனது பரம குரு, என்குருநாதரை வீட்டிற்குப் போகும்படி ஆக்ஞா பித்துக் கட்டாயப்படுத்தியதன்மேல், குருநாதர் தான் இறங்கியிருந்த வீட்டிற்குச்சென்று, தன் தாயாருக்கு நமஸ் காரம் செய்து, தனக்கேற்பட்ட அநுக்கிரஹ வரலாற்றை

நிவேதனம் செய்தனர், தாயாரும் வெகுஸந்தோஷப்பட்டு ஆசிகூறித் தாங்கள் தங்கியிருந்த வீட்டுக்காரரும், தீர்த்த புரோஹிதரும், மஹோபாஸகருமாகிய பிரஹ்மஸ்ரீ பைரவ சாஸ்திரிகளிடத்தில் அவதூதர் அநுக்கிரஹித்த விஷயத்தைப் பற்றிக் கூறினள்.

உடனே, பைரவசாஸ்திரிகள், என் குருநாதர், அவரது தாயார் முதலியவர்கள் பிக்ஷையை யெடுத்துக்கொண்டு போய் உச்சிப்போதில் அவதூதருக்குப் பிக்ஷைசெய்வித்தனர். பிறகு, அவதூதரும் பைரவசாஸ்திரிகளும் ஹிந்தியில் வெகு நேரம் ஸம்பாஷித்துக்கொண்டிருந்தனர்.

அன்று, அமாவாஸ்யை — மஹோதய — புண்ணியகால பர்வாவாயிருந்ததனால் தமது வீட்டில் நடக்கும் பரதேவதாராதனத்திற்குப் பைரவசாஸ்திரிகள் அவதூதரை ஆஹ்வானம் செய்ய, அவதூதரும் வருவதற்கு இணங்கினர்.

பின்னர், அவதூதரை, ஒரு கோச்வண்டியிலேற்றிப் பைரவ சாஸ்திரிகள் தமது இல்லத்திற்கு அழைத்துவந்து, பாதபூஜைசெய்து, ஓர் உயர்ந்த ஆஸனத்தில் அமர்த்தி யாவரும் வந்தனம் செய்துகொண்டு தேவியஜனத்திற்கு ஆரம்பித்தனர். சூரியாஸ்தமனம் வரையில் இருந்து பின்னர், அவதூதர் கங்காதீரம் சென்றனர்.

மறுநாள் முதல், இருபத்தேழு நாள்வரை பிரதி தினம் காலையும் மாலையும் என் குருநாதர் குருஸேவை செய்து கொண்டு அவருடைய திருவாக்கினின்றும் வரும் உபதேச மொழிகளைக்கேட்டுக் கொண்டிருந்தனர்.

மஹோதயத்தன்று பிக்ஷை செய்வதற்கு முன் குருநாதரின் தாயாருக்குச் சக்தி பஞ்சாக்ஷரமும், பிரஹ்மண்ய மந்தரமும் உபதேசிக்கப்பட்டன.

இங்ஙனம், சுமார் ஒருமாதகாலம் பிரயாகை க்ஷேத்திரத்தில் குருகுலவாஸம் செய்யும்போது, பரம்பரையாய் உபாஸித்து வரும் உபாஸனை மூர்த்தியாகும் ஸுப்ரஹ்

மண்ய ஸ்வரூபத்தின்* தத்துவமும் அத்வைத வேதாந்தத்தின் நுட்பமான விஷயங்களுமே ஸ்ரீ அவதூதர் என்குரு நாதருக்குப் போதித்தவையாகும்.

## எனக்கென்னவென்னும் மஹாமந்த்ரம்

அத்வைத வேதாந்தத்தில் பிரஹ்மாபின்ன ஆத்மஸ்வரூப லக்ஷணங்களை யுபதேசித்து வருகையில் "ஆத்மா எந்த லௌகிக வியவஹாரத்திற்கும் ஸம்பந்தப்படாதது. ஆதலின், வியவஹாரங்காரணமாகக் கோபதாபங்கள் அந்தக்கரணத்தில் ஏற்பட்டுச் சாந்த நிலைக்குப் பங்கமுண்டாகுங்கால் "எனக்கென்ன? எனக்கென்ன" என்னும் மஹாமந்த்ரத்தை மனதிற்குள் அநுஸந்தானம் செய். அப்பொழுது அவ்விஷ காரத்தாற்ருக்கிய மனோவிகாரம் நீங்கி ஆத்மஸ்வரூபமான சாந்தி யேற்படும்" என்னும் ஒரு ரஹஸ்யம் பரமகுருவால் என் குருநாதருக்கு உபதேசிக்கப்பட்டது.

## அவதூதரது ஆக்ஞை

இங்ஙனம், எனது குருநாதன் குருகுலவாஸஞ் செய்து கொண்டிருக்கையில், ஒருநாள், அதாவது மாக பஹுள நவமியன்று, அவதூதர் "குழந்தாய்! நீயுனது தாயாரோடு புறப்பட்டு உன்னுடைய இருப்பிடத்திற்குப் போகலாம். நானும் இங்கே வந்து ஒரு மாதத்திற்குமேல் ஆகிறது. நான் பதரிகாஶ்ரமம் செல்லல் வேண்டும். சிவராத்திரிக்கு அங்கே போகவேண்டும், நீங்கள் புறப்பட்டுக் கயை-காசி-முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசித்துக் கொண்டு, புண்ணிய தீர்த்தங்களில் படிந்து, ஶ்ராத்தசிரார்த்தாதிகளைச் செய்து உத்தர யாத்திரையைப் பரிபூர்த்தி செய்துக் கொண்டு, போவீர்களாக." என்று தெரிவித்தனர்.

---

* இவை ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய தத்துவம் என்னும் நூல் வடிவமாய் அச்சிடப் பட்டு நிலவுகின்றன.

எனதுகுரு :—ஸத்குரோ! தங்களைப் போன்ற மஹநீயர் களுக்கும் காலவியவஸ்தை யுண்டோ? சிவராத்திரிக் குப் பதரிகாஶ்ரமம் போக வேண்டுமென்ற ஒரு கர்த் தவ்விய முண்டா? க்ஷேத்திராடனம், தீர்த்தஸ்நானம், மேளா ஸங்கம் முதலியவற்றால் தங்களைப் போன்ற ஆரூடஞானிகளுக்கு ஏற்படும் பயன்யாதேனு முள தோ? ஞானிகள் அடைய வேண்டிய வற்றையெல் லாம் அடைந்தவர்களல்லவா? என்றனர்.

அவதூதர் :— குழந்தாய்! நீ கேட்ட கேழ்விகள் யாவும் ஸரியே. ஞானிகளுக்குக் கர்த்தவ்வியங் கிடையாது. க்ஷேத்திராடனம், தீர்த்தஸ்நானம் முதலியவை வேண்டாம். தோய்ந்த ஸமாதி கலைந்து மனோவ்ருத்தி யோடு கூடியபோது குருவாக்கிய பரிபாலனம் செய் தல் அவசியம். ஆதிநாதராகிய பரமேஶ்வரன் ஆத்ம ஞானிகளுக்கு, க்ஷேத்திர யாத்திரை, புண்ணிய தீர்த்த ஸ்நானம், ஸாது ஸங்கம் என்னும் இம் மூன்றையும் விதித்திருக்கின்றார். ஞானிகள் க்ஷேத்திராடனம் செய் வதால், அந்த ஸ்தலம் பரிசுத்தமடைகின்றது; மூர்த்தி தரிஶனத்தால் சைதன்னியம் நன்கு பிரகாசிக்கின்றது. தீர்த்த ஸ்நாநத்தால் கங்கைக்குப் பரிசுத்தம் ஏற்படு கின்றது. ஸாது ஸங்கத்தால் ஞான பரம்பரை விர்த்தி யாகின்றது. பிரயாகையாகும் இந்த க்ஷேத்திரம் மஹாமஹிமையுடையது. இது மஹாவாக்கிய க்ஷேத் திர மெனப்படும். த்ரிவேணீ ஸங்கமம்தான் ஜீவப் பிரஹ்மைக்கியம்; கங்கையே பிரஹ்மம். யமுனையே ஜீவன். அந்தர்வாஹினியாயுள்ள ஸரஸ்வதியே ஜஹத ஜஹல்லக்ஷணையால் ஸித்தித்த அகண்டைக்கியஞானம். ஆகவே, முமுக்ஷுக்கள்முதல், ஆரூடஞானிகள் வரை யாவரும் இங்கே வஸிப்பின், முமுக்ஷுக்கள் ஞானத்தை யடைகின்றனர்; ஞானிகள் ஸஹஜஸ்தி தியில் ஆனந்த கனமாய் விளங்குகின்றனர், ஆதலின் இது ஜீவன் முக்த க்ஷேத்திர ராஜ மெனப்படும்.

நான் எங்கும் வியாபகமாய் இருந்தாலும், சரீரோபாதி தோன்றும்போது, சரீர யாத்திரைக்கு அத்தியா வசியமான பசி தாகங்கள் தோன்றுவன போல, தேசோபாதியால் ஊர், வீடு, ஆஸ்ரமம், முதலியவைகளும் தோன்றலாம். தோற் றத்தினல் யாதொரு துக்கமு மில்லை.''

"ஞானிகள் சரீரத் தோற்றத்தோ டிருக்கும் போதெல் லாம் பதரிகாஸ்ரமத்தில்தான் இருக்கிறார்கள். பதரி யென்பது நர நாராயணர்களின் க்ஷேத்திர மென்பதை நீ கேட்டிருப்பா யல்லவா? நான் ஜீவனும், நாராயணன் பிரஹ்மமு மாகும். ஜீவப் பிரஹ்மைக்கியம் எந்த சரீரத்தில் ஆயதோ அது பதரிகாஸ்ரம மென்பதில் என்ன தடை? ஞானிகள் சரீரத்தோடுள்ள தசைக்கு ஜீவன்முக்த தசை யென்று பெயர். ஜீவன்முக்தர்களுக்குத் தோன்றுவன வெல்லாம் சிவம் தான். அவர்கள் ஸதா சிவஸ்வரூபத்தில் விழித்துக் கொண்டிருப்பார்கள். அஞ்ஞானிகள் மாயை யில் விழித்திருந்து சிவத்தில் தூங்குவார்கள். ஆதலின், சிவம் அவர்களுக்கு இரவு. அஞ்ஞானிகளுக்கு அந்தகார மாயுள்ள சிவமென்னும் இரவில், ஞானி விழித்திருப்பான். இது தான் சிவராத்திரியில் ஜாகரணம் செய்வதென்பது. இந்த தத்துவங்களெல்லாம் நன்கு மனதில் ஸ்புரிப்பதற்கு அநுக்கிரஹம் செய்கின்றேன். இன்று முதல் பன்னிரண்டு வருஷம் பிறருக்குத் தெரியாமல் ஸ்ரீவித்யா மஹா ஷோட சியை உபாஸனை செய். அது தான் பிரஹ்ம வித்தை யென் பது. இந்த உபாஸனையோடு, ஸூத ஸம்ஹிதா பாராயண மும் ஸ்ரீமஹாவாக்ய ரத்னாவளீ பாராயணமும் செய்து கொண்டு வா. ஆத்மப் பிரஹ்மைக்கிய தத்துவ நிச்சயம் நன்கு ஸ்புரிக்கும். போய் ஸுகமாய் இரு'' என்று உத்தர விட்டனர்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன், எனது குருநாத ருக்குத் தனது ஸத்குருவின் பிரிவை நினைக்கும்போதே துக் கம் புரண்டு வந்தது. ஓ வென்றலறினர். "ஹே ஸத் குரோ! மறுபடியும் தங்களை நான் எப்பொழுது காண்

பேன். நானிருக்கும் சென்னை யெங்கே? தாங்களிருக்கும் பதரிகாஸ்ரமம் எங்கே? தங்கள் பாதாரவிந்தங்களை விட்டுப்பிரிய முக்காலும் ஸம்மதிக்கேன்" என்று அவதூதரின் சரணங்களைப் பிடித்துக்கொண்டு கதறினர்.

அவதூதர் :—(சிரித்து) அட பைத்தியக்காரா! இரவெல்லாம் இராமாயணங்கேட்டு விடிந்ததும் இராமன் சீதைக்கென்ன முறையாக வேண்டுமென்று கேட்பதுபோலிருக்கிறது நீ பேசும் பேச்சு. எனக்கும் உனக்கும் என்ன பேதம்? அகண்டாகார வ்ருத்தியில் ஸ்புரிப்பதன்றோ குருஸ்வரூபம்! எங்கே யெங்கே என்னைப்பார்க்க வேண்டுமென்று நினைக்கின்றனையோ அங்கே அங்கே நான் நிச்சயமாய்த் தோன்றுவேன். நான் எப்பொழுதும் உன்னிடத்தில் தான் வசிக்கிறேன். நீயும் என்னிடத்தில் தான் இருக்கிறாய். நீ புன் தந்தையின் சரித்திரங் கூறினாய். எந்த சாந்தகிரி நிலையனுகும் ஷண்முகன், நின் தந்தைக்கும், நினக்கும் உபாஸனு மூர்த்தமாயிருக்கின்றனனே, அவனுடைய ஸாகார விக்கிரஹத்தில் என் ரூபத்தைத் தரிசிப்பாயாக. மகர மாதம் கிருத்திகை எனது தீக்ஷாதினம். அன்று திருத்தணிகையில் என்னைத் தரிசிப்பாய். இது முதல் பன்னிரண்டு வருடங்கள் அங்கே வரவேண்டும். நினது மூர்த்தாவில் எனது இரண்டு பாதங்களையும் இறுகக்கட்டி வைப்பையேயாயின், யான் உன்னை விட்டு ஒரு அடியாவது பெயர முடியுமா? என்னைக் கட்டிவைக்கும் வல்லமை உன்னிடத்தில் இருக்கும்போது என் பிரிவாற்றுமைக்கு வருந்துகின்றனையே! ஐயோ! அஞ்ஞானத்தை விட்டு விடு. நான் சொன்னவைகளை மறவாமல் சிந்தனை செய். உன் மனமென்னும் பெட்டியில் என் உருவத்தை வைத்திருக்கிறேன். இச்சையாகும் திறவுகோலால் திறந்தால், என் ரூபம் புலப்படும். உற்ற ஸந்தேஹங்களை நிவர்த்திப்பதற்கு யான் உனது விக்ஞான ஸ்புரணமாய் விளங்குவேன். தைரியமாய் இரு" என்று பல ரஹஸ்யங்களைக் கூறி "நீ இன்று புறப்பட்டு அயோத்திக்குச் சென்று ஸ்ரீ ராமமூர்த்தியைத் தரிசித்து வா. ஏகா

தசி யன்று அங்கே ரொம்பவும் விசேஷமுண்டு." என்று உத்தர விட்டனர்.

எனது குருநாதனும் அவ்வாக்ஞையை மீற முடியாமல் தசமி யன்று காலையில் அலஹாபாத்திலிருந்து புறப்பட்டு அயோத்திக்குச் சென்று, ஏகாதசி யன்று, ஸ்வர்ண ராம விக்ரஹத்தைத் தரிசித்துக் கொண்டு, அன்றே புறப்பட்டு பிரயாகை வந்து சேர்ந்தனர். உடனே அவதூதர் இருக்கும் கங்காதீரத்திற்கு ஓடினார். அங்கே அவதூதர் இல்லை. சூர்யாஸ்தமன சமயமா யிருந்தது. அங்கு மிங்கும் தேடினார். தென்பட வில்லை. குருநாதரின் மனம் பதறிற்று. ஆயினும் அவதூதர் கூறிய உபதேச வாக்கியங்களின் வலிமையானது துக்கத்தைத் தடுத்தது. அயோத்திக்குச் சென்று வாவென்று கூறி குருநாதன் திரும்பி வருவதற்குள் அவதூதர் மறைந்தது தான் என்னே! ஆச்சரியம்!!

பிறகு குருநாதன், தன் தாயாரிடமும் பைரவ சாஸ்திரிகளிடமும் அவதூதர் காணாததைப் பற்றிக்கூற, அவர்களும் சிறிது நேரம் துக்கித்து, மறுநாள் யாவரும் கங்காதீரத்திற்கு வந்து அவரைத் தேடினார்கள். அன்று மாலையும் தேடினார்கள், "அவதூதர் இல்லை" என்று தீர்மானித்துக் கொண்டார்கள்.

மறுநாள் புறப்பட்டுக் கயைக்கு வந்து, அங்கே நாலைந்து நாளிருந்து காசிக்கு வந்து சேர்ந்தார்கள். காசி யாத்திரை ஸாங்கமாய் முடித்துக்கொண்டு கல்கத்தா மார்க்கமாய் வந்து ஜகன்னாத க்ஷேத்திரத்தில் சுவாமி தரிசனம் செய்துகொண்டு கோதாவரி, கிருஷ்ணா முதலிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்துக் கொண்டு சென்னைக்கு வந்து சேர்ந்தனர்.

## ரஹஸ்ய உபாஸனை, குருவாக்கிய பரிபாலனம்

குருநாதன் சென்னைக்கு வந்த பிறகு, உத்தியோகத்தைக் கவனித்துக்கொண்டே மந்த்ரஜபம், தியானம், பாரா

யணம் முதலியவைகளை யியற்றிக்கொண்டு, வேதாந்த சாஸ்திரங்களை வாசித்துக்கொண்டு வந்தனர். கடினமான வேதாந்த பிரகரணங்களெல்லாம், நாத சரணுநுக்கிரஹ வலிமையால், பழைய பாடம் போல் அவ்வளவு சுலபமாய் இருந்தன. பல துரூஹமான விஷயங்கள் அவருடைய புத்தியில் மிகச் சுலபமாய் ஸ்புரிக்கும்.

இங்ஙனம், உபாஸனு லோகத்தில், அஞ்ஞாத வாஸம் செய்து வரும்போது, கல்லிடைக் குறிச்சி ராஜாங்க ஸ்வாமிகளைத் தரிசித்தார். அவர் அத்வைத சாஸ்திரத்தை முமுக்ஷுக்களுக்கு ஸந்தேஹ மறப் போதிப்பவர். ஸ்ரீ வித்யோபாஸனு நந்தரர். அச் சுவாமிகளைத் தரிசித்து அவரிடத்தில் பிரஹ்ம ஸூத்திர பாஷ்யசாந்தி செய்து கொண்டனர். பாஷ்ய சாந்தி செய்து வரும் நாளில் ஒரு நாள், குருநாதன் மெய்ம்மறந்து சுவாமிகளை யோனி முத்திரையால் நமஸ்கரிக்க, சுவாமிகள் குருநாதரை உபாஸகரென அறிந்து ரஹஸ்யமாய் விஷயங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டு குருநாதரின் புத்தி ஸூக்ஷ்மத்திற்கு மெச்சி "சதுஸ் ஸூத்ரியோடு பாஷ்ய சாந்தி போதும். நீ ஸ்வயமாகவே மற்ற ஸூத்திரங்களினுடைய பாஷ்யத்தையும், கீதை, உபநிஷத் பாஷ்யங்களையும் பார்த்துக் கொள். உனக்குக் குரு அநுக்கிரஹம் பரிபூர்ணமாய் இருக்கின்றது" என்று அநுக்கிரஹித்து அனுப்பிவிட்டார்.

அநுக்கிரஹம் பெற்ற நாள் முதல் பன்னிரண்டு வருடங்கள் வரையில் குருநாதன் பல அத்வைத ஸபைகளிற் சென்று பல அரிய அத்வைத உபந்நியாஸங்கள் புரிந்து வந்ததுமன்றித் தமது மாதாவின் ஜன்ம பூமியாகிய புதுப்பாளையத்தில் தமது பால்ய ஸ்நேஹிதராகும் ஸ்ரீ. ப. மாசிலாமணி முதலியாரின் முயற்சியால் ஸ்ரீஸமரஸ ஸந்மார்க்க ஸங்க மென்னும் ஒரு ஸபையையும், ஒரு பொதுஜன இலவச புஸ்தகாலயத்தையும் ஏற்படுத்தி அதற்கு அக்கிராஸனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தற்போதும் அப்பதவியை யேற்று வருகின்றனர்.

இங்ஙனம் 1923-ம் வருஷம்வரையில், ஸ்ரீவித்யோபாஸனை வெகு ரஹஸ்யமாய் நடந்துவந்தது. பன்னிரண்டு வருஷங்களிலும் தைக் கிருத்திகை யன்று யாதோரிடையூறுமின்றித் திருத்தணிகைமலைக்குச் சென்று குருகுஹனைத் தரிசித்து வாயார ஸ்தோத்திரம் செய்து வந்தனர். இந்த ஸ்தோத்திரங்களெல்லாம், தமிழில், பலவித பிரபந்த ரூபமாய் ஏற்பட்டன. அவற்றை யெல்லாம் ஒருங்கே சேர்த்து "திருத்தணிகைப் பிரபந்தத்திரட்டு" என்னும் நாமதேயத்துடன் ஒரு நூல் அச்சிடப்பட்டு விளங்குகின்றது.

## அருட்கவி பட்டம் பெறுதல்

இந்நூலானது சென்னை, திருவேட்டீச்சுரர் ஆலயத்தில் அறுமுகன் ஸந்நிதியில் தமிழ்ப் பண்டிதர் திரு. ராகவாச்சாரியாரின் அக்கிராஸனத்தின் கீழ், சென்னை, வேதாந்த தர்க்க போதகாசிரியரும், தமிழ்ப் பேராசிரியருமான கோ. வடிவேலு செட்டியார் அவர்களால், முறைப்படி, அரங்கேற்றம் செய்யப்பட்டது. அப்போது பல தமிழ்ப் பண்டிதர்கள் வந்திருந்தனர். அச்சமயம், புதுப்பாளையம், வித்வான், ப. மாசிலாமணி முதலியார் அடியேனது குருநாதனுக்கு அருட்கவியென்னும் பட்டம் அளித்தல் தகுதியெனப் பிரேரிப்பிக்க அதை, வரகவி, திரு, அ. ஸுப்ரஹ்மண்ய பாரதியார் ஆமோதிக்க, யாவரும் ஒப்புக் கொண்டு அங்ஙனமே அளிக்கப் பட்டது.

## காஞ்சி, காமகோடிபீடத்தில், பௌர்ணமி தோறும் நவாவரணபூஜை நடத்த ஏற்பாடு செய்தல்

பரமகுருவின் ஆக்ஞையின்படி பன்னிரண்டு வருஷங்கள் அஞ்ஞாத சரியை யோடு அம்பாளை யுபாஸித்துப் பதின் மூன்றாவது வருஷம், அதாவது 1924-ல் சரந் நவராத்திரி பௌர்ணமியில், காஞ்சி ஸ்ரீகாமாக்ஷியம்பாள் ஆலயத்தில் காமகோடி பீடமென மிகப்பிரஸித்தி பெற்றதும், சதுர்முகன், ஹயக்கிரீவர் முதலிய தேவர்களாலும், துர்வாஸர்

முதலிய ரிஷிகளாலும் பூஜிக்கப்பட்டதும், ஜகத்குரு ஸ்ரீசங்கர பகவத் பாதாசார்ய ஸ்வாமிகளால் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டதுமான ஸ்ரீசக்கிரத்தில் நவாவரணபூஜை நடத்துமாறு ஏற்பாடு செய்து, அந்நாள் முதல் இந்நாள்வரை, சுமார் பதினெட்டு வருஷகாலமாய், யாதொரு தடையுமின்றி நடந்து வருகின்றது.

இந்த மஹாபூஜையை நடத்திவரும் பொறுப்பைக் குருநாதன் சில வருஷங்கள் தானே, ஏற்று நடத்திவந்து, சுமார் பத்து வருஷங்களாகத் தனது பிரதமசிஷ்யராகிய யோகாநந்த நாதரென்னும் அடியேனிடம் ஒப்புவித்திருக்கின்றார். யானும் குருவாக்ஞையை சிரஸாவஹித்து அதை நடத்தி வருகின்றேன்.

## ஞானஸந்ததியின் அபிவிருத்தி

குருநாதரிடத்தில் முதல் முதல் தீக்ஷை பெற்றவர் ஒரு L. சங்கரய்யர் என்பவராவர். இவர் சில வருஷங்களுக்குப் பிறகு வேறொரு பரம்பரையில் மஹா ஷோடசீ தீக்ஷையைப் பெற்றதனால் நமது மண்டலத்தினின்றும் பிரிந்திருக்கிறார். ஆயினும் உபாஸகரே. இரண்டாவதாக தீக்ஷைபெற்றவன் அடியேனுவன். (3) V. கிருஷ்ணமூர்த்தி அய்யர் - இவர் தற்போது மேல்நாகரம்பேடு என்னும் கிராமத்தில் வஸிக்கின்றனர் (4) டாக்டர் K. S. அநந்தய்யர் (5) நாகஸ்வாமி சர்மா (ஸ்ரீபுரமடைந்தனர்) (6) ராஜாமணி அய்யர் (7) ஸாம்பமூர்த்தி ஐயர் (8) ஸீதாராமய்யர் (9) திருவேங்கடாசாரியார் (10) ஸுந்தரபாஷ்யம் (11) பொன்னுசாமி முதலியார் (12) லாஜர்னல், ஸுப்ரஹ்மண்ய அய்யர் (13) கோபாலபுரம் V. கிருஷ்ணஸாமய்யர் (14) காஞ்சீபுரம் ராமஸ்வாமி அய்யர் (15) நாகப்பட்டணம் N. T. சுப்பிரமணிய அய்யர் (16) மைலாப்பூர் நாராயணஸ்வாமி அய்யர் (17) ஸ்ரீனிவாச அய்யர் (18) வேங்கடாசல அய்யர் (19) ஸ்வாமி சாஸ்திரி (20) மோசூர் சுப்ரஹ்மண்ய சாஸ்திரி முதலியவர்கள் கிரமமாய் தீக்ஷை பெற்றவர்கள். இவர்களுள், பலர், தம்பதி ஸமே

தமாயும் தீக்ஷையை யடைந்துள்ளார்கள். சிஷ்யமண்டலப் பட்டிகை யொன்று தனியாய்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

இங்ஙனம், பலருக்குத் தீக்ஷை செய்வித்து அவர்களை அஹங்கிரஹோபாஸனையில் திருப்பிப் பிரஹ்ம வித்யாப்பியாஸம் செய்வித்து வருங்கால், ஒவ்வொருவருக்கும் தனித்தனியாய்ப் போதிப்பதை விட, யாவரையும் ஒருங்கே சேர்த்து, அவசியமான விஷயங்களைப் போதிப்பது ஸுலபமாயிருக்குமெனநினைத்து, ஒரு ஸபை ஏற்பாடு செய்யவேண்டுமென ஆலோசிக்கப்பட்டது.

## ஸ்ரீபிரஹ்மவித்யாவிமர்சினீ ஸபாஸ்தாபனம்

1937ஹு மேமீ 16உ சென்னை லாயிட்ஸ் ரோட் 178 நெ. டாக்டர். K. S. அநந்தய்யர் வீட்டில், மேடி ஸபை ஸ்தாபிக்கப்பட்டது. அது முதல் பெரும்பாலும், பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில், ஸ்ரீபிரஹ்மவித்யா ஸம்பந்தமாய்ப் பல உபந்நியாஸங்கள் நமது குருநாதரால் நடத்தப்பட்டன. இப்பொழுதும் நடந்துக் கொண்டிருக்கின்றன.

## கிரந்தங்களை யியற்றுதல்

மேற்படி ஸபை ஸ்தாபிக்கப்பட்டது முதல், நாளது தேதிவரையில், குருநாதன், அநேக நூல்களை யியற்றி, அவை யச்சிடப்பட்டு, உபாஸகர்களின் திருக்கரங்களில் தவழ்கின்றன. அவை, (1) ஸ்ரீநகரவிமர்சம் (2) குருதத்துவ விமர்சம் (3) வரிவஸ்யாரஹஸ்யம் (தமிழ் மொழி பெயர்ப்பு) (4) ஸ்ரீவித்யாஸபர்யாபத்ததி (பூஜாகல்பம் - நாகரம்) (5) ஸ்ரீவித்யாஸபர்யாவாஸனை (தமிழ்) (6) ஸ்ரீவித்யா ஸபர்யா வாஸனை (ஆங்கிலம்) (7) ஸ்ரீலலிதோபாக்கியான விமர்சம் (தமிழ்)(8) ஸ்ரீஸுப்ரஹ்மண்ய தத்துவம்(தமிழ்) (9) ஸ்ரீவித்யா நித்யாஹ்நிகம் (நாகரம்) (10) மநீஷாபஞ்சகம் (மூலமும் உரையும்) ஞானப்பிரகாசம் (தமிழ்-வேதாந்தநாடகம்) (12) லலிதா த்ரிசதீ பாஷ்யம் (தமிழ் மொழிபெயர்ப்பு) முதலியனவாகும். அச்சிடுதற்குத் தயாராயிருப்பது ஸ்ரீ காமகலா விலாசம்,(ஆநந்தோல்லாஸ மென்னும் தமிழ் விரிவுரையுடன்.)